# கே.எல்.என்.பொறியியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

மதுரை, ஆக. 18: கே.எல்.என். பொறியியல் கல்லூரியில் சனிக்கிழமை 20 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

மதுரை பொட்டப்பாளையத்தில் உள்ள கே.எல்.என். பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்த விழாவுக்கு, கல்லூரித் தலைவர் கே.என்.கே. கார்த்திக் தலைமை வகித்தார். இதில், அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு உறுப்பினர் செயலர் ஏ.பி. மிட்டல் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, 748 மாணவ, மாணவியருக்கு பட்டங்களை வழங்கி பேசியது:

பொறியியல் படிப்பில் பட்டம் பெற்றவர்கள் சமூகத்தில் பொறுப்புமிக்கவர்களாகத் திகழ்வது அவசியம். தனித்திறனை மேம்படுத்திக் கொண்டு வாழ்வில் முன்னேறவேண்டும். காலச்சூழலுக்கு ஏற்ப எடுக்கும் முடிவுகளே நம்மை மேம்படுத்தும் என்றார். மேலும், அண்ணா பல்கலைக்கழக தரவரிசைப்பட்டியலில் இடம்பெற்ற 28 மாணவ, மாணவியருக்கு சிறப்புச்சான்றுகளும் வழங்கப்பட்டன. இதில், கல்லூரி இணைச் செயலர் கே.எஸ். பாப்ஜி கோபிநாத் உள்பட பலர் கலந்து கொண்டனர். விழாவுக்கான ஏற்பாடுகளை, கல்லூரி முதல்வர் ஏ.வி. ராம்பிரசாத் செய்திருந்தார். கல்லூரிச் செயலரும், தாளாளருமான கே.என்.கே. கணேஷ் நன்றி கூறினார்.



கே.எல்.என்.பொறியியல் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவிக்கு பட்டம் வழங்குகிறார் அகில இந்திய தொழில்நுட்பக்கழக செயலர் உறுப்பினர் ஏ.பி.மிட்டல். உடன் கல்லூரி தலைவர் கே.என்.கே.கார்த்திக் உள்ளிட்டோர்.

# கே.எல்.என். பொறியியல் கல்லூரியில் 20-ம் ஆண்டு பட்டமளிப்புவிழா




மதுரை, ஆக.19-

கே.எல்.என். பொறியியல் கல்லூரியின் 20 வதுஆண்டுபட்டமளிப்புவிழா கல்லூரி வளாகத்தில் உள்ள கே.எல்.என். கிருஷ்ணன் உள்விளையாட்டுஅரங்கத்தில் தமிழ்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. கே.எல்.என். பொறியியல் கல்லூரியின் தலைவர் பொறியாளர்.கே.என்.கேகார்த்திக் தலைமையேற்றுவரவேற்புரை ஆற்றினார். மேலும்,விழாவின் சிறப்புவிருந்தினர் பேராசிரியர்.A.P. MITTAL, Member Secretary, அகில இந்தியதொழில்நுட்பக் கல்விக் குழு(AICTE), புது டெல்லி, அவர்களை அறிமுகம் செய்தார்.விழாவின் சிறப்புவிருந்தினர் பேராசிரியர் A.P. MITTAL நிகழ்த்தியசிறப்புரையில் பட்டம் பெற்றவர்களுக்குவாழ்த்துக்களைதெரிவித்தார். வருங்காலத்தில் பொறுப்புமிக்கவர்களாக வளரவேண்டும் என்றார். ஒவ்வொருவரும் தங்களின் திறன்களைமுழுமையாகஅறிந்துவாழ்வில் முன்னேறவாழ்த்தினார். ஒருவரின் வாழ்வில் நடக்கும் அனைத்திற்கும் தான் எடுக்கும் முடிவுகளேகாரணம் என்பதைஉணர்ந்துபயின்றகல்லூரியின் மதிப்பைமேம்படுத்தபாடுபடவேண்டும் என்று அறிவுறுத்தினார். இவ்விழாவில் மொத்தம் 748 மாணவ,மாணவியர்கள் பட்டம் பெற்றனர். இதில் 28 மாணவ, மாணவியர்கள் அதிகமதிப்பெண்கள் பெற்று அண்ணாபல்கலைக்கழகத்தின் தரவரிசையில் இடம் பெற்றுள்ளனர் என்பதுகுறிப்பிடத்தக்கது.கே.எல்.என். பொறியியல் கல்லூரியின் இணைச் செயலாளர் கே.எஸ். பாப்ஜி கோபிநாத்,நிர்வாக குழு உறுப்பினர்கள். பேராசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் திரளாககலந்துக்கொண்டுவிழாவைசிறப்பித்தார்கள்.கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளருமானமுனைவர். கே.என்.கே. கணேஷ் நன்றியுரை ஆற்றினார். கல்லூரியின் முதல்வர் முனைவர். A.V.ராம் பிரசாத் விழாவின் ஏற்பாடுகளைசிறப்பாகசெய்திருந்தார்.




மதுரை கே.எல்.என். பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் மாணவிக்கு அகில இந்திய தொழில்நுட்ப குழு செயலர் எ.பி. மிட்டல் பட்டம் வழங்கினார். வலமிருந்து தாளாளர் கே.என்.கே. கணேஷ், தலைவர் கே.என்.கே. கார்த்திக், முதல்வர் ராம்பிரசாத்.

# பட்டமளிப்பு விழா

**மதுரை, ஆக. 19 -**

மதுரை கே.எல்.என்., பொறியியல் கல்லூரியில் 20வது பட்டமளிப்பு விழா நடந்தது. தலைவர் கே.என்.கே. கார்த்திக் தலைமை வகித்தார். 748 மாணவர்களுக்கு அகில இந்திய தொழில்நுட்ப குழு செயலர் எ.பி.மிட்டல் பட்டம் வழங்கினார். இதில் 28 பேர் அதிக மதிப்பெண் பெற்று அண்ணா பல்கலையின் தரவரிசையில் இடம்பெற்றனர். கல்லூரி இணை செயலாளர் பாப்ஜி கோபிநாத், நிர்வாக உறுப்பினர்கள், பேராசிரியர்கள், பெற்றோர் பங்கேற்றனர். தாளாளர் கே.என்.கே. கணேஷ் நன்றி கூறினார். ஏற்பாடுகளை முதல்வர் ராம்பிரசாத் செய்திருந்தார்.



## கே.எல்.என். பொறியியல் கல்லூரியில்

# பட்டமளிப்பு விழா

மதுரை,ஆக.19-

மதுரை மாவட்டம் பொட்டப்பாளையத்தில் உள்ள கே.எல்.என். பொறியியல் கல்லூரியில் 20-வது ஆண்டு பட்டமளிப்பு விழா நடந்தது. கல்லூரி தலைவர் கார்த்திக் தலைமை தாங்கினார். அகில 'இந்திய தொழில்நுட்பக் கல்விக்குழுவை சேர்ந்த பேராசிரியர் மிட்டல் மாணவ-மாணவிகளுக்கு படங்களை வழங்கி பேசினார். அப்போது அவர், மாணவ-மாணவிகள் தங்கள் திறன்களை முழுமையாக அறிந்து வாழ்வில் முன்னேற வேண்டும். ஒருவரின் வாழ்வில் நடக்கும் அனைத்திற்கும் அவர்கள் எடுக்கும் முடிவுகளே காரணம் என்பதை உணர்ந்து படிக்கவேண்டும் என்றார். விழாவில் 748 மாணவ-மாணவிகள் பட்டம் பெற்றனர். இதில் 28 பேர் அதிக மதிப்பெண்கள் பெற்று அண்ணா பல்கலைக்கழகத்தின் தரவரிசையில் இடம் பெற்றுள்ளனர். விழாவில் கல்லூரி இணைசெயலாளர் பாப்ஜி கோபிநாத், நிர்வாக குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். கல்லூரி தாளாளர் கணேஷ் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் ராம்பிரசாத் செய்திருந்தார்.